**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 384/2022**

பெயர் : விஜயா (PW1)

த/க/பெ. :

தேதி :26.03.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் வாதி என் மாமியார். 2ம் வாதி என் கணவர். 2ம் வாதியும் முதல் பிரதிவாதியும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். வாதிகள் ஊரில் தான் இருக்கிறார்கள். அவர்களால் சாட்சியம் அளிக்க வர இயலாது. உடல் நலம்சரியல்ல. விசாரித்தால் பதில் சொல்லக் கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வாதிகளின் உடல் நிலை குறித்து மருத்துவ சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு முன்னர் என்னை விசாரிக்க மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் சார்பாக வழக்கு நடத்த எனக்கு அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 06.06.2003 ல் எனக்கு திருமணம் நடைபெற்றது. நான் திருமணத்திற்கு முன்பு என் கணவருக்கு உறவினர் இல்லை. திருமணத்திற்கு முன்பு என் கணவர் வீட்டில் எப்படி சொத்து வாங்கினார்கள் எப்படி பிரித்துக் கொண்டர்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவர் சொல்லி உள்ளார். திருமணத்திற்கு பிறகு 2003 ல்லேயே என் கணவர் விவரம் சொன்னார். 1/3 பாகம் கேட்டு என் கணவர் வழக்கு போட்டுள்ளார். நான் என் கணவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். எத்தனை அயிட்ட சொத்துக்கள் என்றால் தாவா சொத்துக்கள் 3 அயிட்டம். அவற்றை ABC செடியூல்களாக வழக்குரையில் சொல்லி உள்ளோம் என்றால் சரிதான். ஏ ஷெடியூல் என் மாமனார் கணேசனுக்கு சொந்தமானது. அதில் 2 அயிட்டம் உள்ளது. பி ஷெடியூல் சொத்து என் கணவருக்கு பெயரில் உள்ளது. சி ஷெடியூல் 6 அயிட்டம் கோவிலுக்கு சொந்தமானது. திருக்கடையூர் அமிர்தநாராயணன் கோவிலுக்கு சொந்தமானது. யார் பெயரில் சாகுபடி உள்ளது என்றால் முதல் பிரதிவாதி சிவசங்கர், ராஜபாண்டி ஆகியோருக்கு விற்றுவிட்டார். சி ஷெடியூல்சொத்து எங்கள் குடும்பத்தில் இல்லை என்றால் சரிதான். சி ஷெடியூல் சொத்தை முதல் பிரதிவாதி விற்று விட்டார் என்பதற்கு ஆவணம் போட்டுள்ளேனா

என்றால் இல்லை. அவரிடம் தான் ஆவணம் உள்ளது. குடும்ப சொத்துக்கள் என் கணவர் பெயரில் வாங்கபட்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் என் மாமனார் சொத்துக்கள். வேறு யாரும் வாங்கவில்லை. மாமனார் சொத்துக்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு 2003 ல் திருமணம் நடந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எங்கள் குடும்பத்தில் 05.07.2002 ல் ஏற்பட்ட பாக பத்திம் குடுபம்பத்தில் ஏற்பட்ட பாகபத்திரம் என்றால் என் கணவர் மற்றும் மாமியாரை மிரட்டி கையெழுத்து வாங்கிர்கள். **அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** அந்த பாக பிரிவினை காலத்தில் எனக்கு திருமணம் ஆகவில்லை. திருமணம் ஆன 2003 ல் அந்த ஆவணம் குறித்து தெரியவந்தது என்றால் சரிதான். 2002 பாகபிரிவினை செல்லாது என்று 16 ஆணடுகள் கழித்து 2018 ல் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ன் படி ஏ அட்டவணை முதல் வாதிக்கு ஒதுக்கபட்டது என்றால் மாமியாருக்கு கொடுக்கப்படவில்லை. பி அட்டவணை முதல் பிரதிவாதிக்கு ஒதுக்கபட்டது என்றால் சரிதான். என் மாமியாரிடம் கையெழுத்து வாங்காமல் பட்டா மாற்றிக் கொண்டார். சி அட்டவணை சொத்து என் கணவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான் பாகபிரிவினை படி என் மாமியார், கணவர், கொழுந்தனார் அவரவருக்கு ஒதுப்பட்ட சொத்தை அவரவர் வசம் எடுத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அது செல்லாது. ஊரில் உள்ள முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பாகபிரிவினை கரவோலை ஏற்பட்டது என்றால் மிரட்டி வாங்கியதாக அவர்கள் சொல்லி உள்ளார்கள். பி.வா.சா.ஆ 1 ல் உள்ள விபரப்படி வழக்கில்சொத்து விபரம்சொல்லி உள்ளோம் என்றால் சரிதான். என் கணவர் 10 வரை படித்துள்ளார். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவரை மிரட்டி கையெழுத்து வாங்கியதாக போலிசில் புகார் கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள். போலிசார் அவர்களுக்கு சப்போட்டாக இருந்தார்கள். ஊரில் யாரும் பஞ்சாயத்தார்கள் மிரட்டவில்லை என்றாலும், என் கணவர் மாமியார் மன ஒப்புதலுருடன் ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. ஏ அட்டவணை சொத்து என் மாமனாருக்கு பாக பிரிவினை மூலம் கிடைத்தது என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து 1994 ல் முதல் பிரதிவாதி அவர் சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமனார் பி அட்டவணை வாங்கியதற்கான ஆவணம் தாக்கல் செய்துளளேனா என்றால் என் கணவரை

கேட்டால் தான் தெரியும். பி அட்டவணை சொத்து என் மாமனார் இறந்த பின்னர் முதல் பிரதிவாதி வாங்கினார் என்றால் சரியல்ல. காவல் துறையில் புகார்கொடுத்தது தொடர்பாக புகார் ரசீது வழக்கில்தாக்கல் செய்துளேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**